அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 15/2000

எனது இலக்கம்/1/4/4(1)
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07
2000.09.07 ஆந் திகதி

அனைத்து அமைச்சு செயலாளர்களுக்கும்
மாகாண சபை பிரதம செயலாளர்களுக்கும்
திணைக்கள தலைவர்கள் யாவருக்கும்.

**அனைத்து அரசாங்க அலுவலர்களுக்கு ஓய்வூதியமற்ற இடைக்கால படியொன்றையும் அனைத்து ஓய்வுபெற்றவர்களுக்கு மாதாந்த படியொன்றையும் வழங்குதல்.**

மாதாந்தம் ஆகக் குறைந்த 1000/- ரூபாவிலான வரையறையின் கீழ் 2000 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு அனைத்து அரசாங்க அலுவலர்களுக்கும் தமது மாதாந்த சம்பளத்தில் 10% வீதத்திலான ஓய்வூதியமற்ற படியொன்றை (இடைக்கால படியை) வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 2000 யூலை 14 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 11/2000 இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு 12000/- ரூபாவிற்கு மேற்படாத மாதாந்த சம்பள உரித்துடைய அரசாங்க அலுவலர்களுக்கு 2000.08.01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட்ட 600/- ரூபாவிலான இடைக்கால கொடுப்பனவும் இக் கொடுப்பனவுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

02. நாட்சம்பளம் பெறும் அலுவலர்களுக்கும் வேலைசெய்யும் நாளொன்றுக்கு ஆகக் குறைந்த ரூபா47.62 வரையறையின் கீழ் மாதமொன்றில் ஆகக் கூடிய 21 நாட்கள் வரை இப் படியை செலுத்த வேண்டும்.

03. ஓய்வுபெற்றவர்களுக்கும் மாதாந்தம் ஆகக் குறைந்த 500/- ரூபாவிலான வரையறையின் கீழ் ஓய்வூதியத்தில் 10% வீதத்திலான படியொன்றை 2000 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு செலுத்துதல் வேண்டும். 2000 யூலை மாதம் 12 ஆந் திகதிய 04/2000 இலக்கமுடைய ஓய்வூதிய சுற்றறிக்கையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள 300/- ரூபாவிலான மாதாந்த படியும் இவ் 10% இலான படியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

04. தற்போது செயற்படும் சம்பள ஆணைக்குழு 2000 மற்றும் ஓய்வூதிய சம்பளம் தொடர்பான குழுவின் சிபாரிசுகளினை செயற்படுத்தும் போது இக் கொடுப்பனவுகளை மீளாய்வு செய்யும்.

05. இச் சுற்றறிக்கை திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம் மகிந்த பந்துசேன
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு